தென்னாடு என்றால் வயிறு எறிவதேன்?

நம் மீது பஞ்சாபிகளின் பகையுணர்ச்சி

மண்டைக் குடைச்சலைக் கொடுக்கும் மாகாணபேதம்

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (6—10—49) வெளியூர் (7—10—49) | இதழ் 58

தமிழர் தெலுங்கர் என்ற விரோதம் வேறு வளருகிறது

ஜாதிப்பூசலும் கடுகுள்ளமும் தொலைவது எந்நாளோ?

"அந்த, உயர்ந்த சர்க்கார் பதவிகளில் இருக்கும் சென்னை வாசிகளை, பஞ்சாபிலும் மற்றப் பகுதிகளிலும், உள்ளவர்கள், வெறுப்புணர்ச்சியோடு பார்க்கிறார்கள். எனக்கு இது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. தென்னாட்டிலும் தமிழர் தெலுங்கர் என்ற பேத உணர்ச்சி வலுப்பெற்று வருகிறது. கடுகுள்ளத்தையும், ஜாதியையும், ஜாதித் துவேஷத்தையும் ஒழித்துக்கட்டி இந்நாட்டுமக்கள் அனைவரிடமும் அமைதியையும், அன்பையும் தோற்றுவிக்கப் பெண்கள் முனையவேண்டும். மாகாண உணர்ச்சிகளைக் களைய, அகில இந்திய மாதா சங்கம், நல்லதோர் திட்டத்தைத் தீட்டவேண்டும்."

நம்மைக்கண்டால், திராவிடரைக் கண்டால், தென்னாட்டவரைக் கண்டால், பிடிக்கவில்லை, பஞ்சாபியர்களுக்கும், அதனை ஒட்டியுள்ள மற்றப் பகுதியினருக்கும். அதுவும், சர்க்கார் அலுவல் அங்கங்களில் உயர்ந்தப் பதவிகளில் உள்ள மதராசிகளைப் பார்த்தால், பற்றி எரிகிறது, பஞ்சாபியர்களின் அடிவயிறு!

நாம் கூறுவது அல்ல இது! நமக்குத்தான், வடநாட்டார் மீது துவேஷம் கொண்டுவிட்டிருப்பவர்கள் என்ற பட்டம் சூட்டப்பட்டிருக்கிறதே, நமது இலட்சியத்தின் உண்மை தெரியாத உன்மத்தர்களால்! பஞ்சாபியர்கள் மீது குற்றப் பத்திரிகை வாசிப்பது நாம் அல்ல! பின் யார்?

பலகாலமாக, அரசியல் பயிற்சி பெற்றுள்ள மாதர்குல திலகம், தருகிறார் இந்த வேதனை தரும் விவரத்தை! அடுப்படியிலே எழுந்த அங்கலாய்ப்பல்ல இது! பல படித்த மாதர்கள் கூடியுள்ளப் பொது அரங்கத்தில், இவ்வாறு, மூதடைந்த மூதாட்டியார், மனம் நொந்து,—நம்மவரைக்கண்டு பஞ்சாபியர் வெறுப்படைகிறார்கள்—என்று, உடைபதைத்துக் கூறுகிறார். சாதாரணமானவர்கள் கூறி இருந்தால், அலட்சியப் படுத்திவிடலாம்; ஆதாரமற்றப் பேச்சு என்று மனமாற்றம் பெறலாம். ஆனால் கூறுவது, முன்னாள் சென்னை சட்டசபையின் துணைத் தலைவியாக இருந்து, காந்தியப் பண்பாட்டிலும் பற்றுதல்கொண்டு, நாட்டுக்குச் சேவை செய்துள்ள டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் அவர்களாவர். வரலாற்றுச் சுவடிகள் பல, அவர்களுக்கு மனப்பாடமாகத்தானே இருக்க வேண்டும். பல்நாளாக மூண்டு வந்தப் பகை, இன்னும், பட்டுப் போய்விடாமல், அம்மையாரின் மனத்தைப் புண்படுத்தும் அளவிற்கு, பஞ்சாபிலும் மற்றப் பகுதிகளிலும் தலைதூக்கி நர்த்தனம் புரிந்துகொண்டு இருக்கிறது. இந்த அலங்கோலத்தைக் காண்கிறார்கள் அம்மையார், உள்ளம் துடிக்கிறது, ஒளிவு மறைவு இல்லாமல், கண்டக் காட்சியை அம்பலப்படுத்துகிறார்கள், பல மாதர்கள் கூடியுள்ள மன்றத்தில.

அன்று அரசியல் ஆக்க மன்றத்தில், அலறித் துடித்தார், 'வடநாட்டிற்கு வந்துள்ள தென்னாட்டவர்,—வேற்று நாட்டில் உள்ளது போலவே உணருகிறார்கள்' என்று, உடைந்த உள்ளத்தினராய், கோவை இராமலிங்கனார். அதையே, இன்றுமுத்துலட்சுமி அம்மையார் கூறுகிறார் சோகத்தோடு. இதே பொருளில், சில நாளைக்கு முன் 'ஹிந்து' பத்திரிகையில் ஒரு அன்பர் முடங்கல் ஒன்று தீட்டி இருந்தார்.

தென்னாட்டாரை, எதிரிகள் போல் பாவித்து, எரிச்சல் கொண்டு, அலட்சியப் படுத்துகிறார்கள் வடநாட்டார் என்று, நாம்தான் ஏதோ காரணத்திற்காகப், பொருந்தா உரைபகர்ந்து வருகிறோம் என்றால், டாக்டர் முத்துலட்சுமியார், கோவைக் கிழார், 'ஹிந்து' நண்பர், முதலானோர், வட நாட்டாரின் மனோபாவத்தைப் படம் பிடித்துக் காட்டுவதும் பொருத்த மற்றப் பொய்யுரைதானோ? அப்படி ஒருக்காலும் இருக்க முடியாது.

வால்மீகியால் சித்தரிக்கப் பட்டுள்ளதுபோல், திராவிடர்களைத்—தென்னாட்டவர்களைக்—குரங்குகள், மக்கள் நீங்கிய விலங்கினங்கள்—என்ற நம்பிக்கை, வட நாட்டார் உள்ளங்களில், இராமாயண கால முதல், ஊறி உரம் பெற்று வந்திருக்கிறது. வால்மீகியின் வக்கிர புத்திக்கு விரோதமாகத், தென்னாட்டவர், தங்களைக் காட்டிலும் நாகரிகத்தில் சிறந்தும், அறிவாற்றல் மிக்கவர்களாகவும், தங்களைவிட மிருக நிலை மாறியவர்களாகவும், இன்று இருப்பதை நேருக்குநேர் காணும் பொழுது, பஞ்சாபியர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏமாற்றமும் எரிச்சலும் ஏற்பட்டு விடுகிறது. காட்டு மிராண்டிகள்-மந்திகள், நமது பகுதியில், அதிகாரத்தில் இருப்பதும், அதுகளுக்கு, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள நாம அடங்கி இருப்பதும் அக்கிரமம் என்று அவர்கள் ஆலோசிக்கின்றனர். அழுக்காறு அடைகின்றனர், வட நாட்டார் நம் மீது! ஆத்திரம் காட்டுகிறார்கள் நம்மிடத்தில! டாக்டர் முத்துலட்சுமியாருக்கு மனம் புண்படுகிறது! கோவையாருக்கு வேற்று நாட்டிலிருக்கிறோமோ என்ற வேதனைத் தோன்றுகிறது, அவர், வடநாட்டில் இருக்கும் சந்தர்ப்பத்தில்! 'ஹிந்து' நண்பருக்கும் உண்மை புலனாகிறது.

பரிகாரம் இல்லையா இதற்கு? பஞ்சாபியர்கள் பழிப்புக்கும், பகைக்கும், அலட்சியப்படுத்தலுக்கும், நம்மவர்கள் பலியாகாமல் தடுக்க, வழி வகை இல்லையா? இருக்கிறது—கட்டாயம் இருக்கிறது. அதுதான் திராவிட நாடு. நமக்கென்று வேலி அமைத்துக்கொண்டால், நம்மவர் பஞ்சாபில் பதவி தேடவும், அது கண்டு பஞ்சாபியர் பரிகாசமாகப் பார்க்கவும் இருக்கும் நெஞ்சு நோகும் நிலை நீடிக்காது. போக்கிக் கொள்ளலாம், அபவாதத்தை. புலவர்களின் தாக்குதலிலிருந்து தடுத்தாட் கொள்ளலாம் நம்மவர்களை.

ஜாதி ஒழியவேண்டும். அதன் விளைவாக இருக்கும் துவேஷம் தொலையவேண்டும். தமிழர் தெலுங்கர் என்ற, திராவிட இனத்தினர்களுக்குள் மூட்டி விடப்பட்டு - மூண்டுவிட்டுள்ள மனப்புழுக்கம் மறைந்தாக வேண்டும். சிக்கல், நட்புமுறையில தீர்க்கப்படவேண்டும்: மாதர்கள் பணிபுரிய முன்வரட்டும்; நமது ஒத்துழைப்பு என்றும் உண்டு, இந்தப் பணிக்கு என்று உறுதியளிக்கிறோம்.

காரணம்?

"சர்க்கரை ஆலைகளிலும், வர்த்தகர்களிடமும் கையிருப்பில் உள்ள சர்க்கரை நடைமுதல வருஷம் முழுமைக்கும் போதும். ஆனால அடுத்த வருஷ உற்பத்தியை முன்னிட்டு வியாபாரிகள் செய்யும் ஸ்பெகுலேஷன் பேரமே விலை உயர்வுக்குக் காரணம்."

சப்பரமஞ்சத்தில் சயனித்தாலும் குக்கல் மனம் மாறுமா?

ஹிந்து மகா சபையின் ஆசையும் அதிகார மோகமும்!

—(0)—

ஹிந்து ராஜ்யமென்றாலும் மத அரசாக இருக்காதாம்!

"மதம் கலவாத அரசை இந்த நாட்டில் நிர்மாணிப்பதுதான் ஹிந்துமகா சபையின் நோக்கம் ஹிந்து ராஜ்யம் என்பதால், ஹிந்துமத அரசு என்று பொருள் கொள்ளக்கூடாது முன்னேற்றக் கோட்பாட்டைக் கொண்டதாகவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை வெறுக்காதப பண்புடையதாகவும்இருக்கும்" இவ்வாறு விசித்திரமான வாதம் புரிகிறார், ஹிந்துமகா சபையின் பொதுக்காரியதரிசி வி ஜி தேஷ்பாண்டே.

ஆட்சிப் போக்கில், ஹிந்து மதக் கோட்பாடுகளை மேற்கொண்டு நடப்பதில்லை என்பது மெய்யாக இருக்குமானால், 'ஹிந்து' என்னும் மதப் பெயரால் ஒரு ராஜ்யம் காணவேண்டும் என்று ஆசைக்கொள்ளுவது பொருத்தமுடையதாகுமா? 'ஹிந்து' என்ற ஒரு மூன்று எழுத்துச் சொல்லை நிலைநிறுத்துவதற்கா, ஒரு கட்சி இருக்க வேண்டும்? மதத்தின் பெயரைச் சூட்டிவிட்ட பின்னர், 'மதம் கலவாத அரசு' என்று பெயரிட்டு ஒரு அரசை அழைக்க முடியுமா? எலி வேட்டை ஆடுவதற்கா, மலையை உடைத்தெரியும் பணிபுரிவது?

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை வரவேற்குமாம், தேஷ்பாண்டே கனவு காணும் ஹிந்து ராஜ்யம்! விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளை வரவேற்று, வித விதமானப் போர்க்கருவிகளையும், அதற்குத் தொடர்புடைய பல நவீனத் தொழிற்சாலைகளையும் நிர்மாணித்து விடுவதால் மட்டும், முற்போக்கான ராஜ்யம் என்று ஏற்பட்டுவிடாது. எல்லா வாழ்க்கைத் துறைகளிலும்விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளின் உதவியால், சுகம் அனுபவித்துக் கொண்டிருக்கும் ஹிந்து மதச்சனாதனி, மனுமாந்தாவின் புல்லறிவில் பற்றுதலும், நாசக்கருத்துகளில் நம்பிக்கையும் கொண்டு வாழ்வதை இன்றும் நாம் பார்த்துக் கொண்டுதானே வருகிறோம் அவ்வளவுதான் எதற்கு? நவீனக்கண்டு பிடிப்புகளை வரவேற்கும், தேஷ்பாண்டேவிற்கு விஞ்ஞான உணர்ச்சியும், விஞ்ஞானப் பார்வையும் இருந்திருக்குமானால், ஹிந்து மகா சபையைக் கூட்டிக்காக்கும் தொண்டாற்றுவாரா? ஹிந்து ராஜ்யம் காணத் தான்துடியாகத் துடிப்பாரா? மக்கள் விஞ்ஞானப பண்பு பெறவன்றோ உழைக்க முந்துவார்.

விஞ்ஞானப் (Scientific out look)பார்வை, விஞ்ஞான (Scientific Spirit) உணர்ச்சி என்னும் பண்பாடுகள், புதியக் கண்டு பிடிப்புகளைப் பயன் படுத்திக் கொளவதோடு மட்டும பூர்த்தியடைந்து விடக்கூடியதல்ல. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், அந்தப் பண்பாடுகள் பிரிக்கமுடியாதத் தன்மையில, ஒன்றுபட்டுக் கலந்து நிலைத்திருக்க வேண்டும். அத்தகு நிலையில ஹிந்துமதம் என்பதோடு அல்லாமல், மற்ற எந்த மத அடிப்படையும் சீர்குலைந்துபோகும். மத ராஜ்யம் ஏற்பட எவரும பாடுபட முன்வரமாட்டார்கள். மக்களும் அம்முயற்சியை வரவேற்க விரும்பாததோடு, எதிர்க்கவும் முனைவர். எனவே, தேவைப் படுவது ஹிந்து ராஜ்யமல்ல—மக்கள் விஞ்ஞான உணர்ச்சி பெறுவதுதான்! வேண்டுவது விஞ்ஞானப் பார்வையேயன்றி, வெறும் விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளை மட்டும் பயன் படுத்திக் கொள்வது அல்ல! தேஷ்பாண்டே கூறும் ஹிந்து ராஜ்யத்தின் அஸ்திவாரம் இந்த விஞ்ஞானப் பண்பு அல்ல-சனாதனம்-சமஸ்கிருதம் - சண்டாளத்தனம்-சர்வாதிகாரம். ஜெர்மனியில்-ஜப்பானில்—நாம்கண்டது, தேஷ்பாண்டே சித்தரிக்கும், நவீன சாதனங்களை ஏற்றுக் கொண்ட ஹிந்துமத ராஜ்யத்தைத்தான்.

குப்பையிலே புரளும் குக்கல், சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தால், சப்பரமஞ்சத்தில் சயனித்து இருந்தாலும், குக்கல் மனத்தில் மாறுதல் ஏற்படுவது சுலபத்திலா இருக்கிறது?

மாலை மணி

சென்னை 6—10—49 வியாழக்கிழமை

மருந்துக்கு விடுதலை !

'கள்ளச் சந்தையிலும்', 'பதுக்கல் கிடங்குகளிலும்', கிடந்து தவித்துக்கொண்டிருந்த மருந்துகளுக்கு, 'விடுதலை' வழங்கும் நேரிய முறையை சென்னை அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ளார்கள் !

மேல்நாட்டு மருத்துவ முறையில் தயாரிக்கப்பட்டு, விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள மருந்து வகைகள் சம்பந்தமாகவும், சரக்கு கையிருப்பு, விற்பனை, வினியோகம் முதலியவற்றைக் கட்டுப்படுத்தவும், மருந்துகளின் விலைகளை வரையறுக்கவும், தேவை ஏற்படும்போது அரசாங்கத்தாரே குறிப்பிட்ட நியாய விலையில் சரக்குகளைக் கைப்பற்றவும், விதிகளை மீறி நடப்போர்மீது நடவடிக்கை எடுத்துத் தண்டனை விதிக்கவும், நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கவும், மத்திய சர்க்காரின் போக்கையொட்டி சென்னை மாகாண சர்க்கார் அக்டோபர் 3-ம் நாள் அவசரச் சட்டமொன்றை பிறப்பித்திருக்கிறது.

அவசியமான நேரத்தில், இத்தகையவொரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதானது முற்றிலும் வரவேற்கத் தக்கதேயாகும். மக்கள் மாண்டு மடிவதற்கு நோய் எவ்வளவு கொடியதாக விளங்கி வருகிறதோ, அதைவிட அதிகக் கொடியதாக இருந்து வருகிறது மருந்துகளின் 'விலையேற்றம்.' மருந்து விலையேற்றமே ஏழைமக்கள் பலரின் உயிர்களை வவ்விச் சென்றது என்றால் அது மிகைபடக் கூறியதாகாது.

இந்த நாடு ஏழை நாடு. இயற்கை வளத்தில் அல்ல, வாழ்க்கைவசதிகளில் என்பது நன்கு அறிந்த தொன்றேயாகும். பசியும், பிணியும் சாக்காடும் இத்துணைக்கண்டத்து மக்களைப் பீடித்தாட்டுவது போன்று, வேறு மேலை நாடுகளில் எதுவும் இருக்கவில்லை. மக்களுக்கு ஏற்படும் பிணியைப்போக்கும் அளவுக்கு மருத்துவ வசதிகள் இங்கு இல்லை என்பது மட்டுமல்ல, தேவையான அளவுக்கும் எவ்வளவோ மிகமிகக்குறைவான அளவுக்குத்தான் இருந்து வருகின்றன என்பதை, சுகாதார இலாகா கொடுக்கும் புள்ளி விவரக் கணக்கிலிருந்து எளிதில் உணர்ந்துகொள்ளலாம். மருத்துவசிகிச்சை பெறாத காரணத்தினாலேயே நாட்டின் நாலா பக்கங்களிலும் ஏராளமான அளவுக்குப் பிணங்கள் அன்றாடம் சாய்கின்றன என்பதும் அறிவிக்கப்படுகின்றது. இத்தகைய நிலையில், மருந்துகள் கிடைப்பதிலேயே பலதடைகற்கள் இடையே ஏற்படுத்தப் படுமானல் நாட்டின் நிலை என்னாகும்? பிணக்காடாக அல்லவோ மாறும் !

மருந்துகளின் விலையை, 'யானைவிலை குதிரை விலை' என்பார்களே, அதுபோல ஏற்றி வைத்து விற்பதினாலும், மருந்துகளைப் பதுக்கல் கிடங்குகளிலே பதுக்கிவைத்திருந்து, தேவையை அதிகப்படுத்தி, பின்னால் அதிக விலைக்கு விற்கத் துணிவதனாலும், கள்ளச் சந்தையில் விற்று, மிகப் பொருள் பெருக்கத் திட்டமிட்டுவருவதாலும், ஏழைக்கு மருந்து கிடைப்பது என்பது அரிதாகப்போகிவிட்டது. உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் ஏழையின் கடைசி துளி இரத்தத்தையும் உறிஞ்சிக் கொழுக்கத்தான கள்ளச் சந்தைக் கழுகுகள் இந்த நாட்டில் இருந்துவருகின்றனவேயல்லாமல, ஏழைக்கு இதம்புரிய அல்ல. மருந்து வியாபாரிகளில் பெரும்பாலோர் இக்கொடு நெஞ்சம் கொண்டிருக்கும் காரணத்தால், ஏழை எளியவர் பட்ட வேதனை, விட்ட கண்ணீர் கொஞ்ச நஞ்சமல்ல ! அம்மம்ம ! எண்ணவே வேதனை தருகிறது ! அவர்களின் அடங்காக கொட்டம் இந்த அவசரச் சட்டத்தால் அடங்கும் என்று கருதுகிறோம், சட்டம் முறைப்படி, நீதி வழியில செலுத்தப்படுமானல.

டாலர் மதிப்புக் குறைப்பின் காரணமாக, அமெரிக்காவிலிருந்து வந்துள்ள மருந்துகளின் விலையைத், தம் மனம்போன வாக்கில ஏற்றிவைத்துக் கொண்டு, அதன் மூலம் தம் பெருவயிற்றை மேலும் மேலும் நிரப்பிக் கொள்ளலாமா என்று எண்ணிக் கொண்டிருக்கும் கழுகுகளின் ஆசைக்கு, இந்த அவசர சட்டம் ஓர் வெடி குண்டாகக் காட்சி அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

பொருள் கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலும், கள்ளச் சந்தையை பெருக்கிக் கொள்ளப் பழக்கப் பட்டவர்கள் இருந்து வருகிறார்களாதலால், அந்த நாசப் பூண்டுகளை மனித சமுதாயத்திலின்றும அறவே அகற்ற, அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். கள்ளச் சந்தையில் உலவும் சமுதாயச் சீரழிவுக 'கிருமிகளுக்குத்' தக்க தண்டனைகள் விதித்தாலதான், மேலும் பல 'கிருமிகள்' தோன்றுவதற்கு வழி ஏற்படாமலிருக்கும்.

சட்டம் செய்தது கூட அவ்வளவு பெரிய காரியமல்ல. வேலியே பயிரை மேய்வது போன்று, அதிகாரிகளே லஞ்ச ஊழல்களில் தலையிட்டு விதிகளை ஆற்றலற்றதாக ஆக்கிவிடாமல் பார்த்துக் கொள்வதே சிறந்த செயலாகும். கட்டுப்பாடுச் சட்டங்கள் பலவற்றையும் அர்த்தமற்றதாக ஆக்குவதற்கு அதிகாரிகளில் சிலர் காரணமாக இருந்து வருகிறார்கள் என்ற புகார்கள் ஆங்காங்கிருந்து வரக் காண்கிறோம், மருந்துகள் மீது கட்டுப்பாடு விதித்ததில, பயன் ஏதும் ஏற்பட வேண்டுமானல், நிர்வாகத்திலே ஊழலும், லஞ்சமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள அரசாங்கம் முன்வரவேண்டும். அத்தகைய குறைபாடுகளைக் களைவதற்கு, இன்றைய ஆளவந்தார்களுக்குக் கொஞ்சம் அதிகப்படியான துணிவு வேண்டியிருக்குமே என்பதில் தான் ஐயமேற்படுகிறது. இந்த ஐயத்திற்கு இடமில்லாமல் அரசாங்கத்தார் பார்த்துக் கொள்வார்களா?

தனிப்பட்டவர்கள் கையிலே நாட்டிற்கு இன்றியமையாது தேவைப்படும் பொருள்களில் ஒன்றான மருந்துகளை ஒப்படைப்பதைவிட, அரசாங்கமே மருந்து விற்பனையை ஏற்றுக்கொண்டு, வல்லார்க்கும் அல்லார்க்கும் எளிதில் கிடைக்கும்படி நிலையை நடைமுறைக்குக்கொண்டுவருமானல், அது அரசாங்கத்துக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லதாகும்.

கள்ளச்சந்தையரிடத்து அகப்பட்டுக்கொண்டு விழிக்கும், மருந்துக்கு ஓரளவு விடுதலை ஏற்பட்டுவிட்டது கண்டு மகிழ்கிறோம் !

அறிவிப்பு

"மாலை மணி" அலுவலகப் பணியாளர்களுக்கு ஓய்வு அளிக்கும் நலன் கருதி, "மாலை மணி" ஞாயிறு வெளியீடு (வெளியூர் திங்கள் வெளியீடு), வரும் கிழமையிலிருந்து நிறுத்தப்படுகிறது என்பதை ஏஜண்டு தோழர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும், வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்.

தோல்வியும் வெற்றியும் !

"பாகிஸ்தான் எல்லைப் பிரதேசத்திற்கு அதிக சர்க்கரை சென்றது. இதனால் பாகிஸ்தானுக்கு சர்க்கரை கள்ளத்தனமாகக் கொண்டு செல்லப்பட்டிருக்கக் கூடுமென்ற சந்தேகம் எழுகிறது. சர்க்கரை வாங்குவதற்காக ஸிண்டிகேட்டுடன் பாகிஸ்தான அதிகாரிகள் பன்முறை சம்பாஷணை நடத்தினர் ஆனால் பயனில்லை. பாகிஸ்தான சர்க்கார் தோல்வியடைந்த விஷயத்தில கள்ள வர்த்தகர்கள் வெற்றிபெற்றுவிட்டனர் போலும்! இந்திய டொமினியன் எல்லைப் பிரதேசங்களுக்கு மாத்திரம் 15,300 டன் சர்க்கரை கொண்டு செல்லப்பட்டிருக்கிறது"

உலைக்கூடம்

['சம்மட்டி']

புகழ் பறிக்கும் விமானம் !

சில நாளைக்கு முன்னால், பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்திலும், குறிப்பாகச் சென்னை மாகாணத்திலும், கவர்னர் ஜெனரல், கவர்னர்கள், மந்திரிகள், கலெக்டர் போன்ற பெரும் பெரும் பதவியிலிருப்பவர்கள் எல்லாம் தனித் தனியாக, ஒரு விழாக் கொண்டாடினார்கள். அது என்ன விழா என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? தலையைக் கொஞ்சம் தூணில் பலமாக மோதிக் கொண்டாவது, மூளையைச்சரிப்படுத்திக் கொண்டு யோசித்துப் பாருங்கள்! கலைமகளின் கருணைக் கண்ணைத் திறப்பதற்கல்லவா, சிலகாளாக நீங்கள் எல்லாம் உங்கள் சிந்தனைக் கண்களைக் கூருடாக்கிக்கொண்டு இருக்கிறீர்கள்! எனவேதான், பாறாங் கல்லில் முட்டிக் கொள்ளுங்கள் உங்கள் சிந்தனை சக்தி மீண்டும் உங்களிடம் திரும்ப வேண்டுமானல், என்று கூறினேன்! கோபித்துக் கொள்ளாதீர்கள்!

என்? அந்தப் பெருவிழா உங்கள் நினைவுக்கு வரவில்லையா? பத்திரிகைகளிலெல்லாம் படங்கள் போட்டுப் பிரமாதப் படுத்தப்பட்ட விழாவைக் கூடவா நீங்கள் மறந்து போயிருக்கிறீர்கள்? கொஞ்சம் பொறுங்கள் 'சம்மட்டி'யடி கொடுக்கிறேன்!

செடி கொடிகள் நடும் விழா கொண்டாடி, நாட்டுக்கு எவ்வளவு மகத்தான சேவையைச் செய்திருக்கிறார்கள் நமது மதியூக மந்திரிகள் மறந்துவிடலாமா இந்த மேற் போன்றச் செயலை? என்னுடைய ஐந்து வயது மகன்கூட மறக்காமல், எங்கோ பிள்ளையார் கோயில பிரகாரத்தில முளைத்துக் கொண்டிருந்த பிரமிச் செடியையும் எருக்கஞ் செடியையும் பிடுங்கிக் கொண்டு வந்து, எங்கள் வீட்டுப் பூந்தோட்டத்தில் நட்டு வைத்திருக்கிறான் என்றால், நாட்டுக்குடிகளாக இருக்கும் நீங்கள், மந்திரிகளின் செடி நடும் விழாவை இதற்குள் மறந்து விடுவது நீதியாகுமா? நீங்களே சொல்லுங்கள் தாமதானே என்று!

நமது ஆளவந்தார்களுக்கு இருக்கிற அளவிற்குப் பெரும் புத்தி, இந்த இஸ்லாம் மத அரசான பாகிஸ்தான் அமைச்சர்களுக்கு இருப்பதில்லை! ரொம்ப ரொம்ப மண்டுகள்? எதைச் செய்தால, மக்கள் கவனத்தைச சுலபமாகத் தங்கள் பக்கம் இழுக்கலாம், என்றென்றும் மக்கள் தங்களை மறந்து விடாமல் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பன போன்ற 'ராஜதந்திரம்' கொஞ்சங்கூடத் தெரிவதில்லை அவர்களுக்கு நமது அமைச்சர்களின் அருஞ்செயலைப் பார்த்தாவது, இந்த அரிய பாடத்தைக் கற்றுக்கொள்ளக்கூடாதா? அவர்களுக்கு இருக்கும் பகைமை உணர்ச்சி, இதிலும் தூக்கிட்டு விடுகிறது போலும்!

தரையோடு பறந்து செல்லும் ஒரு ஆகாய விமானத்தை, விதைகள் தூவுவதற்காகப், பரிட்சார்த்தமாகப் பயன்படுத்தி இருக்கிறார்களாம் பாகிஸ்தானில்! பாகிஸ்தான் புதிதாக நிர்மாணிக்க இருக்கும் தலைநகரத்தில் நாற்பது ஏக்கர் நிலப் பரப்பில, அந்த விமானத்தின் துணைகொண்டு, 'புல்புல்' விதைத் தூவப்பட்டதாம். நல்ல பலன் உண்டானல், எதிர் காலத்தில், செடி நடுதலுக்கும் விவசாயத்துக்கும், இந்த முறையை மேற்கொள்ள இருக்கிறதாம்.

எவ்வளவு விரோத உணர்ச்சி இருக்கிறது பார்த்தீர்களா பாகிஸ்தானுக்கு நமது மந்திரிகள்மீது! 'இதோ பாருங்கள் எங்கள் நாட்டில் செடி நடுபவர்கள் வேகாத வெய்யிலில் கஷ்டப்படப்போவதில்லை ஆகாய விமானத் துணைகொண்டு அதனைச் செய்யப் போகிறோம்' என்று வம்புக்கிழுக்கிறார்கள் நமது அமைச்சர்களை! பாகிஸ்தான் மந்திரிகளுக்கு, மக்கள் மீது, நமது மந்திரிகளுக்கு இருப்பது போன்ற விஸ்வாசம் இருந்திருக்குமானல், நமது மந்திரிகள் செய்ததுபோல, அதாவது தங்கள் கைகளினாலேயே செடி நட்டது போல அந்த மந்திரிகளும் செய்ய முன்வந்திருக்க மாட்டார்களா? பாகிஸ்தான் மந்திரிகளுக்கு, நமது மந்திரிகளுக்கு இருப்பதுபோன்ற மக்கள் பற்றுமில்லை— நாட்டுப் பற்றுமில்லை!— வெறும் மத வெறிகொண்டவர்கள்!

நமது அமைச்சர்கள், தாங்களே செடி நடுவதின்மூலம், மக்களிடம் கிடைத்தப் புகழையும், தட்டிப் பறித்துக்கொள்ள ஆகாயவிமானம் போட்டியிடுவதைக் கண்டு, ஆத்திரப்படக் கூடாது! தாங்கள் செய்யும் இந்த ஒரே ஒரு நல்ல பணியையும் சிறுதாக்கிக் காட்டும் விமானத்தின் மீதும் வீண் மனஸ்தாபம் கொள்ளக்கூடாது! என்ன இருந்தாலும், நமது மந்திரிகளின் புகழ் பறிக்கும் செயலை, பாகிஸ்தான செய்திருக்கக் கூடாது என்று, நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மிருகத்திற்குத்தான் !

தலைமுறைத் தலைமுறையாகப் புகழ் பரப்பி வந்தக் குடும்பத்தில் பிறந்த ஒருவன், குடும்பப்பெயரைக் குலைக்கும் வகையில், மன்னிக்க முடியாத மாபபிழையைச் செய்து விட்டான். தந்தை செய்து விட்ட தவறை நினைத்து நினைத்துத் தனயன், வெளியில வருவதையே குறைத்துக் கொண்டான் இதனை, அந்தத் தெருவிலே இருக்கிறவர்களில இருவர் பேசிக்கொண்டார்கள் பின்வருமாறு.

'அந்த வீட்டுத் தம்பிக்கு, வெளியில தலை காட்டவே முடியவில்லையாம்!' என்றான் ஒரு.

'ஏன்? தலை காட்ட முடியவில்லையாம்? கடும் வெய்யிலா? பெரும் மழையா?' என்றான் சோதா.

'நம்மைப் போன்ற மிருகத்துக்கன்றோ அந்த அச்சம்! அவன் தன்மானத் தம்பியாச்சேப்பா!' என்றான் ஒரு.

போருக்கு வித்து !

ஜெர்மனிக்கு, பெர்லின் மீண்டும் தலைநகராக வேண்டும் என்ற கோரிக்கை ஒன்றை, மேற்கு ஜெர்மன் பார்லிமெண்டு நிறைவேற்றி இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

செய்யூர்—கிளை

செய்யூர், அக். 2—

இன்று மாலை 6-30 மணிக்கு செய்யூர் கடை வீதியிலுள்ள திராவிடர் கழகக்கட்டிடத்தில், தோழர் சி. எல். ராசன் தலைமையில் திராவிடர் கழக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் திராவிடர்கழகத் தலைமைத் தொடர்பைத் துண்டித்து விட்டு, திராவிடமுன்னேற்றக்கழகம் செய்யூர்-கிளை அமைப்பது என முடிவு செய்யப்பட்டது. பின்னர் தோழர். சி. சுதர்சனம் அவர்களை செயலாளராகக் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. எனத்தோழர் சி சுதர்சனம் எழுதுகிறார்.

* * *

குடியேற்றம் (வ. ஆ)—கிளை

குடியேற்றம், (வ.ஆ) அக். 3—

1-10-49 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு குடியேற்றம் சந்தைப் பேட்டை திராவிடர் கழகப் படிப்பகத்தில் தோழர் செ. ப. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகச் செயற்குழு கூடிற்று.

'திராவிடர் கழகம்' என்ற பெயருடைய கழகத்தை திராவிட முன்னேற்றக் கழகம் என மாற்றி அமைப்பது எனத் தீர்மானிக்கப் பட்டது.

பின்பு புதிய செயற் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்—பா. துரையரசு துணைச் செயலாளர்-தி. ச. சுப்பிரமணியம். நிதி உறுப்பினர்-சி இரா. சாரங்கபாணி. விளம்பர உறுப்பினர்-சே. ப. வெங்கடேசன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்: அ. கிருட்டினசாமி, ப. மா. மோகனம், கூ. பே யோவான், இரா. கண்ணன், மோ. சி. தட்சணாமூர்த்தி, க. ஜெகதீசன், க. து. இராமசாமி, பே. மாணிக்கம், கு. சி. பொன்னுசாமி. எனச்செயலாளர் தோழர் பா. துரையரசு எழுதுகிறார்.

* * *

பாலமேடு—கிளை

பாலமேடு அக். 3—

2—10—49 காலை 10 மணிக்குத் தோழர் அ. காலகுட்டி அவர்கள் கடையில், திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெற்றது. கழகத்தலைவர் தோழர் எ. கே. டி. மணி தலைமை வகித்தார். ஈ. வெ. ரா. திருமணம் செய்து கொண்டது கழகக் கொள்கைக்கும் ஜனநாயகத்துக்கும் முரணாய் இருப்பதால் அவர் தலைமையில் நம்பிக்கை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுத் 'திராவிடர் கழகம்' கலைக்கப்பட்டது.

அதே இடத்தில் தோழர் முத்துக்காமாட்சி தலைமையில், திராவிட முன்னேற்றக்கழக ஆதரவாளர்கள் கூட்டம் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம்—பாலமேடு (மதுரை மாவட்டம்) கிளை என்று அமைப்பதென ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. தோழர் ஆ. கு. மாவேல் அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:- கே. வி. முத்துக்காமாட்சி, வே. சின்னச்சாமி, எ. காலகுட்டி, எம். பழனிசசாமி. எனத் தோழர் ஆ. குமாவேல் எழுதுகிறார்.

* * *

குளித்தலை—கிளை

குளித்தலை, அக். 3—

2-10-49மாலை 7 மணிக்கு தி.மு. கழக அமைப்புக் கூட்டம் 'ராஜா பேக்கரியில்' கூடிற்று. வந்திருந்த உறுப்பினர்களைக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம்-குளித்தலை கிளை என்ற பெயரில் கழகம் காணப்பட்டது. பிறகு செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

செயலாளர்-ஆர். ராஜா. பொருள் உறுப்பினர்— ஆர். சுப்பிரமணியம் விளம்பர உறுப்பினர்-மணி. முத்துசாமி. ஏனைய செயற்குழுவினர்- அர்த்தநாரி, செல்லன், அப்துல் ரஹ்மான், வைத்திலிங்கம்.

பிறகு இவ்வூர் திராவிடர் இயக்கத்தோழராயும் எழுத்தாளராயும், இந்தி எதிர்ப்புக் குழுத்தலைவராயும் இருந்த தோழர் மா. சுந்தரமூர்த்தியின் திடீர் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அக்டோபர் இறுதிக்குள் கழகப் பேச்சாளர்களைக் கொண்டு ஆரம்ப விழா நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. நன்றி கூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது. எனத் தோழர் கு. சா. ராஜா எழுதுகிறார்.

* * *

பட்டுக்கோட்டை—கிளை

பட்டுக்கோட்டை, அக். 3—

2—10—49 ஞாயிறு மாலை 4 மணிக்கு தோழர் கே. எஸ். சிவராமகிருஷ்ணன் அவர்கள் இல்லத்தில், தோழர் ப. இராமசாமி அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது சுமார் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட தோழர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

புதிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது:—

செயலாளர்கள்:—பி.சாமுவேல், இரா. சௌரிராசன், ப. இராமசாமி. பொருள் உறுப்பினர்கள்:— கே. அருணாசலம், ஜி. தங்கப்பன். விளம்பர உறுப்பினர்கள்:—இர. இளவரி, கே. வி. திராவிடமணி.

ஏனைய செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தோழர் கே. எஸ். சிவராமகிருஷ்ணன் அவர்கள் கழக ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றை விளக்கித் தனது அறிக்கையைப் படித்தார்கள். அவரைப்பின்பற்றி தோழர்கள் பி. சாமுவேல், கே. அருணாசலம், என். சங்கரன், கே. மாணிக்கம், ஜி. தங்கப்பன், கே. வி. திராவிடமணி, முத்துக்குமரன், சீனிவாசன (வைத்தியர்) இர. இளவரி ஆகியோர் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். தோழர் கே. எஸ். சிவராமகிருஷ்ணன் அவர்கள் நன்றிகூற, 7-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது. என விளம்பர உறுப்பினர் தோழர் இர. இளவரி எழுதுகிறார்.

* * *

மேட்டூர் அணை—கிளை

மேட்டூர் அணை, அக். 3.—

2—10—49 ஞாயிறு மாலை 2 மணிக்கு மேட்டூர் அணை-கிளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புக்கூட்டம் தோழர் பாலு அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தோழர் ஆர். ஜே. ஞானராஜு அவர்கள் தலைமைவகித்தார் ஒன்பது பேர் கொண்ட செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—அ. சுப்பிரமணியம் துணைச்செயலாளர்—ம. சு. நஞ்சப்பன்; பொருள் உறுப்பினர்—க. கு. சின்னசாமி; விளம்பர உறுப்பினர்—கே. பி. விநாயகம். ஏனைய செயற்குழு உறுப்பினர் —சுப்பிரமணியம்; ஆறுமுகம், அய்யாத்துரை, சுந்தரம், பரமன், இன்னும் செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள செயற்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. தோழர் பாலு நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

திருச்சி காலனி—கிளை

திருச்சி, அக். 3.—

1—10—49 சனி மாலை 6 மணிக்கு திருச்சி பெல்ஸ்கிரவுண்ட் 5 எண் உள்ள தோழர் ஜி. அய்யாதுரை அவர்களின் இல்லத்தில் திராவிட முன்னேற்றக்கழக ஆதரவாளர்கள் கூடி, திருச்சி காலனி—கிளை திராவிடமுன்னேற்றக் கழகத்தை அமைத்தார்கள். தோழர் வி. சுப்பிரமணியம் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிக் கூறினார்.

புதிய செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்:—ஜி. அய்யாதுரை துணைச் செயலாளர்:—வி. சுப்பிரமணியன்; நிதி உறுப்பினர்:—எம். பழனி; விளம்பர உறுப்பினர்:— எம். சிங்காரம்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்:- எஸ். மாணிக்கம், சி. பெருமாள், எ. குருசாமி, வி. பழனி, டி. திருவேங்கடம், வி. ராமன், எ. வெள்ளையன், வி. தங்கவேலு.

காலனி தி. மு. கழகம் அமைக்கும் வரை தோழர் ஜி. அய்யாதுரை அவர்களின் இல்லத்திலேயே கழக வேலைகளை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. செயலாளர் நன்றிகூறக் கூட்டம்இனிது முடிந்தது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

கீரப்பாளையம்—சிற்றூர்க்கிளை

கீரப்பாளையம், அக. 3—

சிதம்பரத்தை அடுத்த கீரப்பாளையத்தில்2-10-49ம்நாள்ஞாயிறுமாலை 5மணிக்கு மேற்படி ஊரைச்சேர்ந்த ஆரம்பப்பள்ளியில் தோழர் கே. பி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் கழகம அமைக்கப்பட்டுச் செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எ. கே. இராமசாமித் துணைச் செயலாளர்:—எ. கண்ணையன்; நிதிஉறுப்பினர்:-என். கோபால கிருட்டிணன், விளம்பர உறுப்பினர்:—கே. கிருட்டிண மூர்த்தி.

ஏனைய உறுப்பினர்கள்:— எம். பழனிவேல், எம். இராமையன், எஸ். சரவணன், எஸ். இரத்தினம் ஆர். இரத்தினவேலு, ஆர், விட்டல்தாசு, எஸ். வெண்ணிலிங்கம், டி. நடராசு, கே. எஸ். சிவக்கொழுந்து, காதர் மொய்தீன், கே. பி. சுப்பிரமணியன், கே. அப்துல்சத்தார், தாமோதரன் எனச்செயலாளர் தோழர் எ. கே. இராமசாமி அறிவிக்கிறார்.

* * *

கரியாப்பட்டணம்-கிளை

கரியாப்பட்டணம், அக. 3—

கரியாப்பட்டணம் திராவிட கழக உறுப்பினர்களும், ஆதரவாளர்களும 1-10-49 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தோழர் எஸ். ஜி. செல்லப்பா அவர்களின் மாளிகைக்கு அருகிலுள்ள திட்டில் தோழர் எஸ். ஜி. செல்லப்பன் அவர்கள் தலைமையில் கூடி, திராவிட முன்னேற்றக் கழகம் என அமைக்கப்பட்டது. செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-எஸ். ஜி. செல்லப்பா துணைசெயலாளர்—நிதி உறுப்பினர்— ரா. சங்கரம் விளம்பர உறுப்பினர்-கே. எஸ். முருகையன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் ரெ. பொன்னுசாமி, மு. காசிநாதன், ப. குப்புசாமி, ப. வெங்கிடாசலம், எஸ். நடராசன், மொத்த உறுப்பினர்கள் முப்பது பேர் சேர்ந்துள்ளனர். என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

ஆற்காடு—கிளை

ஆற்காடு, அக. 3—

திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் 2-10-49 மாலை மணிக்கு காந்திபவன் மேல்மாடியில் நடைபெற்றது. மேற்படி கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர இசைந்து 75 தோழர்கள் கையொப்பம் இட்டனர். பின்னர் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—த. பொன்னம்பலம், துணைசெயலாளர்:—சிமங்களம், சிவானந்தம் பொருள் உறுப்பினர்:—ஆர். மணிவண்ணன். விளம்பர உறுப்பினர்:—பாலகிருட்டிணன், கிருட்டிணன்.

ஏனைய செயற்குழு உறுப்பினர் இரா. சீனுவாசன், க. அ. மோகனம், ஆர். டி. லிங்கம், ஆர். நடராசன், முனிகண்ணு, அ. கோவிந்தராசு, எ. பி. சாமராசன், ஆ. மணி எழிலன், ஆர். ஞானவேல, கோ. நாராயணசாமி என விளம்பர உறுப்பினர் தெரிவிக்கிறார்.

* * *

சேலம் அம்மாப்பேட்டை—கிளை

சேலம், அக். 3—

2-10-49 மாலை 6-30 மணிக்குத் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம், ஸ்டாலின் கே. ராமசாமி தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் எ. சித்தையன், பி. ஆர். சோமசுந்தரம், வரதராஜுலு, எஸ். வி. நம்மாழ்வார், டி. என். ராமலிங்கம் முதலியோர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கமாக எடுத்துக்கூறினார்கள். பின்னர் புதிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எம். பி. வள்ளியப்பன். துணைச்செயலாளர்:— பி. பெருமாள், எ. ஆர். சுப்பையன், நிதி உறுப்பினர்:—கே. கொண்டையா. விளம்பர உறுப்பினர்:— டி. என். ராமலிங்கம்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:— எஸ்.டி. சுந்தர், ராமையன், ஆர். கே. பட்டாபி, எஸ். வி. நம்மாழ்வார், பி. எஸ். கந்தசாமி, சுக்கூர், பி. பழனிவேல், கே. என். நாகையன், பி. பெருமாள், எம். ஆர் சந்திரன், கே. எஸ். அப்துல்ரஹீம, என். வி. கணபதி, எம். ஜீவரத்தினம், எ. எல். கண்ணையா, எம். ஆர். வரதன்.

செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

பழைய வத்தலக்குண்டு — கிளை

பழைய வத்தலக் குண்டு, அக். 3—

இவ்வூர் திராவிடர் இயக்க ஆதரவாளர்கள் 30-9-49 இரவு 7 மணிக்குத் தோழர் ரா. மாணிக்கம் அவர்கள் தலைமையில் கூடி, திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப் பட்டது. செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்: ஆ. இளந்திரையன். துணைசெயலாளர் -அ. பெருமாள். நிதி உறுப்பினர்—மு. துரைப்பாண்டி. விளம்பர உறுப்பினர்:— மா. ராமையா.

ஏனைய செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

கூடலூர் பழையபட்டினம்—கிளை

கூடலூர் O.T., அக். 3—

2-10-49 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கூடலூர் ப. ப இருசப்ப செட்டித்தெரு. நூல் நிலையத்தில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் அமைப்புக்கூட்டம், ஈரோடு புலவர் த. சிவசங்கரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் பெ. அ. இளங்கோ; துணைசெயலாளர் - கு தண்டபாணி; நிதி உறுப்பினர்-ப. அருணாசலம்; விளம்பர உறுப்பினர்-சு. ஜெயபால்; ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—கி. கோவிந்தராசன்; இரா. நெடுஞ்சேரலாதன், இரா. தேவதாஸ், ஜலில், மு. அ சுல்தான், ஜா. ஜனார்த்தனம், மு. குஞ்சிதபாதம, மேலும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள செயற்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

திருப்பூர்—கிளை

இன்று மாலை 6 மணிக்கு திருப்பூர் நகர திராவிடர் கழக கட்டிடத்தில், தோழர். பெத்தாம பாளையம் பி. பழனிசாமி அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

1 சென்னையில் 17, 18, நாட்களில் பெருவாரியான திராவிடத் தோழர்களால் முன்னேற்றக்கழகம அமைத்ததை பாராட்டுகிறது.

2 கழகத்தின் ரிகார்டுகள், பொருள்கள் முதலியவற்றை ஒருமனதுடன் முன்னேற்றக் கழகத்திற்குச் சேர்த்துக்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

செயற்குழுவினர்கள்:- செயலாளர்:—க. சுப்பிரமணியம்; துணைச் செயலாளர்:—கு. முத்துராசு; நிதி உறுப்பினர்:-டி. நடராசன்; விளம்பர உறுப்பினர்:—வி. பொன்னு. மற்ற உறுப்பினர்கள் :- எஸ். ஆர். சுப்பிரமணியம், பெத்தாம்பாளையம பி. பழனிசாமி, மு. அ. ராசகோபால், ந. பால்ராசு, கே. எஸ். அப்துல் காதர், எ. பி. சாமி, வை. அரசு, கே பி. செல்வன், க. சு. சேரலாதன், ஆர். பி. இராசு, எம. குப்புசாமி, என். நாகராசு, கா. வேலு, கே. பி. இராமசாமி, மாயூப். இன்னும் 5 உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ள தீர்மானித்தது.

செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது எனத் தோழர் வி. பொன்னு எழுதுகிறார்.

* * *

சுண்டக்காமுத்தூர்—கிளை;

சுண்டக்காமுத்தூர், செப். 30—

30-9-49 இரவு 8-30 மணிக்கு அண்ணாத்துரை வாலிபர் கழகத்தின் கூட்டம, தோழர் சு. ராமசாமி அவர்கள் தலைமையில் கூடியது. கழகத்தின் இன்றைய நிலையைப் பற்றி தோழர் வி. பழனிசாமி, சு. கு. தாண்டவன் பேசிய பின்னர் அண்ணாத்துரை வாலிபர் கழகம் என்ற பெயரை, திராவிட முன்னேற்றக் கழகம் என்று திருத்தி அமைக்கப்பட்டு செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:-சு. ரா. ராமசாமி, துணைச் செயலாளர்:— சு. ஆ. பழனிசாமி. நிதி உறுப்பினர்:— ர. மாணிக்கம். விளம்பர உறுப்பினர்:—வீ. பழனிசாமி.

ஏனைய செயற்குழுவினர்கள்:— சு. கு. தாண்டவன், சு. ந. பெருமாள், சி நஞ்சப்பன், ந கொண்டான், சு. கு. வையாபுரி, மு. ஜகநாதன். ம. ராமணன்.

நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் சு. ரா, ராமசாமி எழுதுகிறார்.

* * *

இராமநாதபுரம்—கிளை

இராமநாதபுரம், அக். 2—

2-10-49 காலை 9 மணிக்கு, தோழர் உ. பஞ்சாட்சரம் தலைமையில் முன்பிருந்த திராவிடர் கழகம கலைக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகம்அமைக்கப்பட்டது. அதற்கான செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

செயலாளர்:-இரா. கா. வீரமணி, துணைச் செயலாளர்:—ஆறுமுகம் நிதி உறுப்பினர் சோ. சொக்கலிங்கம், விளம்பர உறுப்பினர்:- வெ. மாரிமுத்து.

ஏனைய செயற்குழுவினர்கள்:- கா. சண்முகம். அ. அப்பாவு, க. கிருட்டிணமூர்த்தி, ம. சன்னசி, நாதன்.

எதிர்கால நடவடிக்கைகள் பற்றிப் பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக்கூட்டம் இனிது முடிந்தது. எனத்தோழர் வெ. மாரிமுத்து எழுதுகிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 4/45, Muthumari Chetty Street, Madras-1

மேற்கு ஜெர்மன் அரசமைப்புக்கு சோவியத் எதிர்ப்பு

கீழ் ஜெர்மன் அரசுகாண ஏற்பாடு

மாசோதுங் ஆட்சிக்கு மாஸ்கோ அங்கீகாரம்

அமெரிக்காவின் தயக்கமும், பிரட்டனின் மனப்புழுக்கம்!

"ஜெர்மனியைத் துண்டாடுவது என்பது முடிவில் உண்மையாகப் போய்விட்டது பெர்லினைப் பொறுத்தவரையில் இது பயங்கரமான விளைவுகளைத்தான் கொடுக்கும். இப்பொழுது நடப்பதாக நம்பப்படுகிறபடி சம்பவங்கள் உருவாகிக்கொண்டு போகுமானல், மறுபடியும் ஜெர்மனியை ஒன்று படுத்தும் கோட்பாடு மண்ணுக்கடியில் மறைய வேண்டியதுதான்."

என்று பெர்லின் நகரத்தில் நடைபெறும் பிரெஞ்சுப் பத்திரிகை எழுதுகிறது.

மேற்கு ஜெர்மனியில் புதிதாக ஏற்பட்டுள்ள ஜெர்மன் சர்க்காருக்கு எதிராக, சோவியத் பகுதியிலுள்ள கீழ் ஜெர்மனியிலும் பெர்லினைத் தலைநகராக்கொண்டு ஒரு சர்க்காரை ஏற்படுத்தவும் சோவியத் ரஷ்யா முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறது. சோவியத் ஜெர்மன் பகுதியில் இதனை ஆதரித்து, சென்றவார இறுதியில், ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்டனவாம். புதிதாக ஏற்படுத்தப்பட இருக்கும் சோவியத் பகுதி ஜெர்மன் சர்க்கார்தான் ஜெர்மனி முழுதுக்கும் ஆட்சியுரிமையுடைய சர்க்கார் என்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறதாம். இந்தக் கருத்தை உள்ளடக்கி, **போன்** நகரில் நிறுவியுள்ள மேற்கு ஜெர்மன் சர்க்கார், ஜெர்மனியில் எதிர்காலம் குறித்து முன்னுள் முடிவிற்குவந்த **போஸ்ட்டாம்** ஒப்பந்தத்திற்கு விரோதமானது என்று, சோவியத் சர்க்கார், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகளுக்கு கண்டனக் குறிப்பு அனுப்பியுள்ளதாம்.

இதன் பலனாக, பெர்லின் பிரச்சினை குறித்தும், ஜெர்மனியின் எதிர்காலம் குறித்தும் சோவியத்துடன் பேசி, ஒருமனப்பட்டு எந்த முடிவையும் ஏற்படுத்த முடியாது என்று அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் முடிவுக்கு வரலாம் என்ற யூகம் பலமாகக் கிளம்பி இருக்கிறது.

மேற்கு ஜெர்மனி சர்க்காரோடு பெர்லின் மேற்குப் பகுதியைப் பன்னிரெண்டாவது அங்கமாகச்சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று, மேற்குபெர்லின் ஆட்சி மன்றத் தீர்மானத்தையும் மேற்கு ஜெர்மன் அரசின் தீர்மானத்தையும், பெர்லின் நகரப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கக்கூடாதென்பதற்காக, இதுவரையில் ஏற்றுக்கொள்ள மறுத்து வந்தன மேற்கு ஜெர்மனியின் தோழமை அரசுகள். இனிமேல் இந்தப் பிரச்சினையிலும் புதுவழி காணப்படலாம்.

இச் சூழ்நிலையில், பெர்லின் நகர விஷயமாக, பாரிசில் கூடிய மாநாட்டிற்குப் பிறகு, மறுபடியும் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், சோவியத் கூடிப்பேசுவதில் எதாவது நேர்மையான முடிவு காண முடியுமா என்பது சந்தேகந்தான் என்று அரசியல் அலைகள் கிளம்பிய வண்ணம் இருக்கின்றன.

ஜெர்மன் மக்கள் சித்திரவதைக்குள்ளாகிறார்கள், அனுகுண்டார்களின் ஆதிக்க மோகத்தால். என்றுதான் ஜெர்மன்மக்களுக்கு விடுதலை கிடைக்க வழி பிறக்குமோ!

* * *

சீனவில் பீபிங் நகரில், மக்கள் உள்ளங்களில் உவகைப்பூத்து மணம் கமழ, உயர்ந்தோர் கம்பத்தில் ஐந்து நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ள செங்கொடி உயர்த்தப்பட்டு, விண்ணில் வெகு சம்பீரமாகப் பறக்க, வெளிநாட்டு மந்திரி **ஷோயென்லாய்** வெற்றி மகிழ்ச்சி முகத்தில் தாண்டவமாட, வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு, வேண்டுகோள் விடுத்திருக்கிறார், புதிய மக்கள் குடியாட்சிக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று. சோவியத், வேண்டுகோளைக் கண்ணியப்படுத்தி, பீபிங் நகருக்கு சோவியத் பிரதிநிதிகளை அனுப்புவதற்கு முன், கோமிண்டாங் கொலு வீற்றிருக்கும் **காண்டனில்** இருந்து வந்த சோவியத் பிரதிநிதியை, அலுவலகத்தை அடியோடு மூடிக்கொண்டு, வீடு திரும்பவேண்டுமென்று ஆணையிட்டு விட்டது. காண்டன் நகரில் இருக்கிற சியாங் சர்க்கார், ஒரு மாகாண சர்க்கார் நிலையைப் பெற்றுவிட்டிருப்பதால், இனி அது வெளிநாடுகளிலே வீம்புக்கு விருது பேசுவது வெறும் கேலிக்கூத்து என்று கிண்டல் செய்து இருக்கிறதுசோவியத்.

சோவியத்தைப் பின்பற்றி, பல்கேரியாவும், செக்கோஸ்லோவியாவும், போலந்தும் மாசோதுங் சர்க்காரை வரவேற்றுவிட்டன.

பீக்கிங் நகரிலுள்ள அமெரிக்க அதிகாரியிடம், புதிய சீன சர்க்காரின் அங்கீகாரக் கோரிக்கையை, நேரில் கொடுத்திருக்கிறார் மாசோதுங். பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஹாலந்து, பெல்ஜியம் முதலிய நாட்டுப் பிரதிநிதிகளுக்கு, பீப்பிங் நகரிலேயே, அங்கீகாரக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறதாம்.

காமன்வெல்த் நாடுகளைக் கலந்து முடிவிற்குவருவது என்று பிரிட்டன் தீர்மானித்து இருக்கிறதாம் கனடாவிற்குச் சென்றுள்ள பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி பெவின், கனடா சர்க்காருடன், இதுபற்றிக் கலந்து பேசக்கூடும் என்று நம்பப்படுகிறது. சில நாளைக்கு முன்பே, பிரிட்டிஷ் மந்திரிகள் பிரிட்டனின் டாலர் பிரச்சினை விஷயமாகப் பேச அமெரிக்கா சென்றிருந்த பொழுது, இது பற்றியும் பேசியிருக்கக்கூடுமென்று இருக்கும் வதந்தியிலும் உண்மை இருக்கத்தான் இருக்கும்.

இந்தியாவும், புதிய சீன அரசை அங்கீகரிக்கவேண்டுமென்று, சரத் சந்திரபோசும், சோஷலிஸ்டுகுழுவினரும் கேட்டுக்கொண்டுஇருக்கிறார்கள். சீனவில் உள்ள இந்தியப்பிரதிநிதியிடம் இப்பிரச்சினை பற்றிக் கலந்தாலோசிக்க, அவரை இந்தியா வருமாறு, இந்தியசர்க்கார் அழைத்திருக்கிறதாம்.

இவ்வளவையும் கண்டதும் காண்டனில் உள்ள கோமிண்டாங் கும்பலுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வருகிறது. மாசோதுங் கம்யூனிஸ்ட் சீனவை ஏற்றுக்கொள்ளுவது, விரோதமானச் செயல் என்று இரைச்சல் போடுகிறது!

ஐக்கிய நாடு சபையிலும் இனியும், சீன மக்களின் நம்பிக்கையை இழந்து விட்ட சீன தேசிய சர்க்காரின் பிரதிநிதி உறுப்பினராக இருப்பது ஒழுங்கல்ல என்றும், கம்யூனிஸ்ட் சீனவின் பிரதிநிதிதான் பங்கு கொள்ள வேண்டுமென்றும், சோவியத் ரஷ்யா, பிரச்சினையைக் கிளப்பும் என்றும் நம்பப்படுகிறது. மக்களை மதிக்காத சர்வாதிகாரி சியாங்கின் சங்கதி, சர்வதேச சபையிலும் சிரிக்கப்பட இருக்கிறது!

இனி நடப்பவை

சென்னை, புதுப்பேட்டை—புதுப்பேட்டையில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 8—10—49 சனி மாலை 6-மணிக்கு சியாளி முதலித் தெரு 21-ம் எண்ணுள்ள மாடியில் நடைபெறும். தி. மு. கழகத்தில் ஆர்வமுள்ள தோழர்கள் அனைவரும் வரும்படி தோழர் ஏ. எஸ். ஆதிரூபன் அழைக்கிறார்.

* * *

சென்னை — சென்னை 15-வது வட்டம் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 9-10-49 ஞாயிறு மாலை 6 மணிக்கு கோவிந்தப்ப நாய்க்கன் தெரு 104-எண்ணுள்ள கட்டிட மாடியில் நடைபெறும். அவ்வமயம் தி. மு. கழகம் அமைத்து செயற்குழு தேர்ந்தெடுக்கப்படும். சௌகார் பேட்டை வட்டத்திலுள்ள தி. மு. கழக அனுதாபிகளும், கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர இணங்கிய தோழர்களும் வந்து கலந்து கொள்ளும்படி தோழர் இ. வடிவேலன் கேட்டுக்கொள்ளுகிறார்.

* * *

இராஜபாளையம்—இந்நகர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 9—10—49 ஞாயிறு காலை 10-மணிக்கு நாடார் பொது நந்தவனத்தில் நடைபெறும். தி. கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி தோழர் கா. திராவிட மணி (தி. க. செயலாளர்) வேண்டுகிறார்.

* * *

மதுரை—மதுரை, சந்தைப் பேட்டை அண்ணாத்துரை இலவச வாசகசாலையின் செயற்குழுக் கூட்டம் மேற்படி வாசகசாலையில் தோழர் எஸ். முத்து தலைமையில் 9-10-49 காலை 10 மணிக்கு நடைபெறும். அவ்வமயம், நடப்பு ஆண்டுக்கு நிர்வாகிகள் தேர்வும், தி. மு. கழக நகர-கிளை ஏற்படுத்த ஆலோசனையும் நடைபெறும். எனவே உறுப்பினர்களும், இயக்க அன்பர்களும் இதையே அழைப்பாக ஏற்று வருகை தரும்படி தோழர் எஸ். முனியப்பன் (செயலாளர்) எழுதுகிறார்.

* * *

சேலம்—இந்நகர் சிறு மலர்ப் பள்ளி பழைய மாணவர் கழகத்தின் ஆதரவில் 9—10—49 ஞாயிறு மாலை 4 மணிக்குத் தோழர் வி. ஏ. மரியதாசை பீ. ஏ. (ஹானர்ஸ்) எல். டி., தலைமையில் 'பாரதி விழா' கொண்டாடப்படும். தோழர் கே. பழனிசாமி புலவர் சொற்பொழிவாற்றுவார். எனத் தோழர் ஏ. பெருமாள் (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

திருவண்ணாமலை—இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 9-10-49 காலை 9 மணிக்கு அசலியம்மன் கோவில் தெரு, சாமி கட்டிட மேல் மாடியில் நடைபெறும். கழக ஆதரவாளர்கள் அனைவரும் வருமாறுத் தோழர் ஆர். தாமலிங்கம் வேண்டுகிறார்.

* * *

மதுரை—மதுரை தெற்கு வாசல் திராவிட இளைஞர் கழகம் தாள முத்து-நடராசன் நினைவுப் படிப்பகக் கட்டிடத்தில், 9-10-49 ஞாயிறு காலை 10 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். ஆர்வமுள்ளத் தோழர்களனைவரையும் தோழர் என். எஸ். ராசா (செயலாளர்) அழைக்கிறார்.